முடிவடைந்துள்ளன என்று கூறினார்கள். குடிநீர்க் குழாய் மட்டுமல்ல, பாதாளச் சாக்கடைக் குழாய்கள் பதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதிகளிலெல்லாம் உடனடியாகச் சாலைப் பணிகளை மேற்கொள்ள நிதியினை ஒதுக்கீடு செய்து அந்தச் சாலைகளெல்லாம் மேம்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புது உத்திகளைக் கையாண்டு, புது technique-லே P.M.C. எல்லாம் போட்டு, milling எல்லாம் செய்து, அவ்வளவு அற்புதமான சாலைகளையெல்லாம் அமைத்துள்ளார்கள். அந்தளவுக்கு கனமழை பெய்தபோதும்கூட, கோட்டூர்புரம் சாலைகளிலெல்லாம் 12 அடி அளவிற்குத் தண்ணீர் நின்றபோதும்கூட எந்தப் பாதிப்பும் ஏற்படாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாலைகளை அமைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அச்சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

குளிர்பதன வசதிக் கூடம்

***886—திரு. பெரியண்ணன் அரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென குளிர்பதன வசதிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கோட்டை நகரில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். புதுக்கோட்டை நகரில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டத்திற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

(முற்பகல் 10-25

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், கடையம், ஆலங்குளம், சுரண்டை, வீரக்கேரளம்புதூர் போன்ற பகுதிகளில் சுமார் 7,000 ஏக்கர் நிலப் பரப்பளவில் 5,000 குறு, சிறு விவசாயிகள் வருடந்தோறும் வெங்காயம், தக்காளி போன்ற காய்கறி வகைகளைப் பயிரிட்டு வருகின்றனர். விளைச்சல் அதிகமாகும் காலங்களில் விலை கடுமையாக வீழ்ச்சி அடையும்போது, இந்த ஏழை, எளிய விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்பு வெங்காய விலையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டதால், இந்த விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்து, வெங்காயத்தை சாலைகளிலும், ஓடைகளிலும் கொட்டிவிட்டனர். கடந்த வாரம் தக்காளிக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் இருக்க, ஏழை குறு, சிறு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் இருக்க, இந்தக் காய்கறிகளைப் பாதுகாத்திட குளிர்பதனக் கிடங்கு அமைப்பதோடு, வெங்காயத்திற்கு ஒரு நிலையான விலையை நிர்ணயம் செய்யுமாறு*

இவ்வரசை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் கருதியும், பொதுமக்களுடைய வாங்கும் சக்தியைக் கருதியும், இன்றைக்கு அனைத்துத் திட்டங்களையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 19 குளிர்பதனக் கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், வெங்காய விலை வீழ்ச்சியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதாவது, வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் அதிகமாக வந்த காரணத்தினாலும், சென்ற வருடத்தைவிட இந்த வருடம் விவசாயிகள் வெங்காய உற்பத்தியில் அதிகமாக ஈடுபட்டதன் காரணத்தினாலும், உற்பத்தி அதிகமான காரணத்தினாலும் வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பொருட்களையெல்லாம் சேமிப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வானம் பார்த்த பூமியாகும். அந்த மாவட்டத்தில் வற்றாத ஜீவ நதிகள் கிடையாது. அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, காய்கறி, பழங்களையெல்லாம் உற்பத்தி செய்கின்றார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் 1,000 ஏக்கர் வம்பன் பழப் பண்ணை இருக்கின்றது. புதுக்கோட்டை, குடுமியான்மலையில் அண்ணா விவசாய ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. ஆனால், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளையும், பழங்களையும் பதப்படுத்திக்கொள்ள குளிர்பதன வசதி கிடையாது. எனவே, அந்த மக்களுடைய*

2016 ஆகஸ்ட் 30]

கோரிக்கைகளை, கஷ்டங்களை நிறைந்து புரிந்துகொண்டு, இந்த அரசு புதுக்கோட்டை நகரத்தில் குளிர்பதன வசதியை உருவாக்கித் தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நலன் மட்டுமல்ல, வாங்குபவர்களுடைய நலனையும் கருதி, அவர்களுடைய வாங்கும் சக்தியையும் கருதி, தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் மூன்று இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் இருக்கின்றன. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புதுக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 4,677 மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் சுமார் 478 மெட்ரிக் டன் விற்பனை உபரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், சுமார் 15,640 மெட்ரிக் டன் பழங்கள் உற்பத்தியில், ஏறத்தாழ 1,439 மெட்ரிக் டன் மட்டுமே உபரி உற்பத்தியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, புதுக்கோட்டையில் தனியாகக் குளிர்பதனக் கிடங்குகளை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், புதுக்கோட்டை நகரிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவுள்ள ஆலங்குடியில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவில் ஊரக உட்கட்டமைப்பின் நிதியின்கீழும், 18 கிலோ மீட்டர் தொலைவுள்ள இலுப்பூரில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் தேசிய வேளாண் திட்டத்தின்கீழும் குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை நகர விவசாயிகள் மேற்கண்ட குளிர்பதனக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதையும் செய்து, சொல்லாததையும்*

செய்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையில் புரட்சியை ஏற்படுத்தி வருகிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, விவசாய மக்கள் வாழ்ந்துவரும் பகுதியாகும். வெங்காயம், மிளகாய் அதிகமாக விளையும் பகுதியாகும். எனவே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களைப் பாதுகாக்க, விளாத்திகுளத்தில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 8 குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் அத்தனையையும் பயன்படுத்தி வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் குளிர்பதனக் கிடங்குகள் இருக்கின்றன. அதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.